செய்தி வெளியீடு எண் : 18 நாள் : 13.05.2018.

**தேனி மாவட்டம்,**
**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோவில் கம்பத்திற்கு புனித நீர் ஊற்றி வழிபாடு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தேனி மாவட்டம், வீரபாண்டி பேரூராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோவில் சித்திரை பெருந்திருவிழாவினை முன்னிட்டு, இன்று (13.05.2018) திருக்கோவில் கம்பத்திற்கு புனித நீர் ஊற்றி வழிபாடு செய்தார்.

வீரபாண்டி அருள்மிக திருக்கோவில் சித்திரை பெருந்திருவிழா 08.05.2018 முதல் 15.05.2018 வரை கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழக அரசின் உத்தரவின்படி, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைத்துத்துறை அலுவலர்களுடன் ஆலோசனைக்கூட்டம் நடத்தப்பட்டு, பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் எளிதாக சுவாமி தரிசனம் மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு போதிய பேருந்து வசதி, பாதுகாப்பு வசதி, குடிநீர், கழிப்பிட வசதிகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஏற்ப்படுத்தப்பட்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

மேலும், கோவிலுக்குள் 25ம், பிறப்பகுதிகளில் 25ம் என மொத்தம் 50 சிசிடிவி கேமிராகள் மூலமும், தேவையான இடங்களில் சுழல் கேமிரா மூலமும், ஆற்றங்கரை பகுதி, பேருந்து நிறுத்தும் இடங்களில் உயர்கோபுரங்கள் வழியாகவும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தேவையான அளவு பாதுகாப்புக்காக காவலர்களும், 24 மணி நேரமும் பணிபுரியும் வண்ணம் மருத்துவக்குழுக்களும், 108 ஆம்புலன்ஸ் வாகனமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் வசதிக்காக தேவையான இடங்களில் மின்விளக்குகள், அறிவிப்பு பலகைகள், ஒலிப்பெருக்கிகள் ஏற்படுத்தி தகவல்களை உடனுக்குடன் தெரிவிக்கவும், கோவிலில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட உள்ள பணியாளர்கள் தகவல்களை எளிதில் பரிமாறிகொள்ள வாக்கிடாக்கிகள் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு தேவையான தகவல்களை ஒலிபெருக்கி மூலம் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

தேனி மாவட்டத்தில் முக்கிய திருவிழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வரும் அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் சித்திரைப் பெருந்திருவிழாவிற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி, இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் திருத்தேர் செய்திட ரூ.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தேர் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும், இறையன்பர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு ஏதுவாக ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் அன்னதானக்கூடமும் கட்டப்பட்டுள்ளது. கோயிலில் உள்ள உலோக சிற்பக்ங்கள் மற்றும் சாமி உற்சவ சிலைகளை பாதுகாத்திட வேண்டி உலோக சிலைகள் பாதுகாப்பு மையம் ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. கோயிலுக்கு வருகை தருகின்ற இறையன்பர்கள் மா விளக்கு எடுப்பதற்கு வசதியாக நீண்ட விசாலமான மண்டபம் அமைத்திட ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் மா விளக்கு மண்டம் கட்டப்பட்டுள்ளது. கோயில் நிர்வாக வசதிக்காக ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கோயில் செயல் அலுவலர் அலுவலகம் கட்டி தரப்பட்டுள்ளது.

தமிழக அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள சிறு திருக்கோயில்கள் உட்பட கிராமப்புறத் திருக்கோயில்களிலும், நாள்தோறும் முறையாக பூஜை நடைபெறுவதற்கு பூஜை உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் தேனி மாவட்டத்தில் வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் உட்பட 70 கோயில்களுக்கு பூஜை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் போது, தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.பார்த்திபன் அவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.எம்.சையதுகான் அவர்கள், வீரபாண்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.செந்தில்குமார் அவர்கள், வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில் அலுவலர் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.டி.கணேசன் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**